## சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

# சுற்றுலா

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2021 – 2022

### மானியக் கோரிக்கை எண். 29

## டாக்டர் மா. மதிவேந்தன்
சுற்றுலாத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2021

## மானியக் கோரிக்கை எண். 29

## சுற்றுலா

## கொள்கை விளக்கக் குறிப்பு – 2021–2022

## பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் எண். |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | இந்தியாவில் சுற்றுலா | 3 |
| 3. | தமிழ்நாட்டில் சுற்றுலா | 5 |
| | 3.1 சுற்றுலாத்துறையின் குறிக்கோள்கள் | 7 |
| | 3.2 உத்திகள் | 9 |
| 4. | தமிழ்நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகள் வருகை | 10 |
| 5. | பொருட்காட்சிகள் மற்றும் விழாக்கள் | 12 |
| | 5.1 உள்நாட்டு பயணச் சந்தைகளில் பங்கேற்றல் | 13 |
| | 5.1.1 உள்நாட்டு பயணச் சந்தைகள் / கண்காட்சிகள் 2020–2021 | 14 |
| | 5.1.2 சர்வதேச பயணச் சந்தைகளில் பங்கேற்றல் | 15 |
| 6. | உலக சுற்றுலா தின விழாக் கொண்டாட்டங்கள் | 15 |

| | | |
|---|---|---|
| | 6.1 பொங்கல் சுற்றுலா விழா | 16 |
| 7. | வெளியீடுகள் – விளம்பரம் | 17 |
| | 7.1 வரவேற்பறை புத்தகங்கள் | 20 |
| 8. | மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் நுட்பவியல் நிறுவனம், துவாக்குடி, திருச்சிராப்பள்ளி | 20 |
| 9. | சுற்றுலா பாதுகாப்பு அமைப்பு | 22 |
| 10. | சுற்றுலா உள்கட்டமைப்பு | 24 |
| | 10.1 மாநில அரசு நிதி உதவி திட்டங்கள் | 24 |
| | 10.1.1 உள்கட்டமைப்பு வசதி திட்டங்கள் – 2020–2021 | 25 |
| | 10.1.2 சாலை மேம்பாட்டுப் பணிகள் – 2020–2021 | 26 |
| | 10.2 ஒன்றிய அரசு நிதியுதவி திட்டங்கள் | 27 |
| | 10.2.1 சுவதேஷ் தர்ஷன் திட்டம் | 27 |
| | 10.3. ஆசிய வளர்ச்சி வங்கித் திட்டம் | 29 |
| | 10.3.1 சுற்றுலாத் துறைக்கு புதிய கைபேசி செயலி மற்றும் இணையதளம் | 31 |
| | 10.4 முன்மொழியப்பட்ட திட்டங்கள் | 32 |
| | 10.4.1 மாமல்லபுரம் நினைவுச்சின்ன தல மேம்பாடு திட்டம் | 32 |

| | | |
|---|---|---|
| | 10.4.2 பிரசாத் திட்டத்தின்கீழ் இராமேஸ்வர மேம்பாடு | 33 |
| 11. | தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் | 34 |
| 12. | ஓட்டல் பிரிவு | 35 |
| | 12.1 தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களை மேம்படுத்துதல் | 36 |
| 13. | படகு குழாம்கள் | 37 |
| | 13.1 படகு குழாம் பணியாளர்களுக்கு திறன் மற்றும் பயிற்சி வழங்குதல் | 38 |
| | 13.2 படகு குழாம், முட்டுக்காடு | 39 |
| | 13.3 படகு குழாம், முதலியார்குப்பம் | 40 |
| | 13.4 படகு குழாம், உதகமண்டலம் | 41 |
| | 13.5 படகு குழாம், பைக்காரா | 42 |
| | 13.6 படகு குழாம், கொடைக்கானல் | 43 |
| | 13.7 படகு குழாம், ஏற்காடு | 44 |
| | 13.8 படகு குழாம், பிச்சாவரம் | 44 |
| | 13.9 படகு குழாம், குற்றாலம் | 45 |
| | 13.10 தொலைநோக்கி இல்லம் | 46 |
| 14. | சுற்றுலா மற்றும் போக்குவரத்து பிரிவு | 46 |

| | | |
|---|---|---|
| | 14.1 ஆன்மீகச் சுற்றுலா சுற்றுக்கள் | 48 |
| | 14.2 தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சந்தைப்படுத்தும் முயற்சிகள் | 49 |
| | 14.3 விடுமுறை இல்லம் – முன்வைப்பு விடுதி திட்டம் | 50 |
| 15. | பொருட்காட்சிப் பிரிவு | 53 |
| 16. | தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மின்னாளுமை முயற்சிகள் | 54 |
| 17. | பங்கு ஈவுத்தொகை | 56 |
| 18. | முடிவுரை | 56 |
| | இணைப்பு–1 சுற்றுலா நிர்வாக அமைப்பு | 58 |
| | இணைப்பு–2 தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக நிறுவன அட்டவணை | 59 |
| | இணைப்பு–3 சுற்றுலா அலுவலகங்கள் | 60 |
| | இணைப்பு–4 சுற்றுலா தகவல் மையங்கள் | 61 |

## சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

## மானியக் கோரிக்கை எண். 29

## சுற்றுலா

## கொள்கை விளக்கக் குறிப்பு –2021–2022

**1. முன்னுரை :–**

பயணமே மனிதனைப் பண்படுத்துகிறது. அவனை முதிர்ச்சியடையச் செய்கிறது. பாதம் மண்ணில் படப்பட பூமியில் வேர் விடவும், வானத்தில் கிளை விடவும் மனிதன் கற்றுக்கொள்கிறான். பயணத்தின்போது பல்வேறு நாடுகளையும் மொழிகளையும் சார்ந்த பலரைச் சந்தித்து அவன் விரிவடைகிறான். அவன் எண்ணங்கள் செழுமை பெறுகின்றன.

'ஒருவன் தன் வாழ்நாளில் பத்தாயிரம் மைல் பயணம் செய்திருக்க வேண்டும், பத்தாயிரம் புத்தகங்களைப் படித்திருக்க வேண்டும்' என்பது சீனப் பழமொழி. தமிழ்க் காவியங்கள் பயணத்தை மையமாகக் கொண்டே எழுதப்பட்டன. சிலப்பதிகாரம் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து மதுரைக்குச் சென்ற காரணத்தால் நிகழ்ந்த கதை. பயணம் போனால் மட்டுமே வாழ்க்கை சரித்திரம், இல்லாவிட்டால் அது

வெறும் சம்பவம். இந்திய இதிகாசங்கள் மட்டும் அல்ல, கிரேக்க இதிகாசங்களும் பயணத்தையே அடிப்படையாகக் கொண்டவை.

சுற்றுலா, மனிதர்களுக்கு அனுபவத்தைச் சந்தையாக்குகிற செயல்பாடு. மலைச்சாரலைப் பார்த்தோ, அருவியில் குளித்தோ, கடற்கரையில் களித்திருந்தோ, அரண்மனைகளைக் கண்டு மகிழ்ந்தோ, ஆழ்கடலில் பயணித்தோ பெறுகிற அனுபவம்தான் சுற்றுலாவில் முதலீடு.

சுற்றுலா, மனிதர்களை இணக்கத்துடன் வாழ வைக்கிறது. மனித நேயத்தை வளர்க்கிறது, அன்பையும் பண்பையும் விளைவிக்கிறது. கற்றுக்கொள்ளத் தூண்டுகிறது. வேலைவாய்ப்பை அள்ளித் தருகிறது. அனைத்துத் தரப்பு மக்களையும் சுற்றுலா ஒற்றை இழையில் இணைக்கிறது.

கல்விச் சுற்றுலா, வர்த்தகச் சுற்றுலா, கூட்டச் சுற்றுலா, கருத்தரங்குச் சுற்றுலா, கண்காட்சி சுற்றுலா, ஆன்மிகச் சுற்றுலா, வழிபாட்டுச் சுற்றுலா, சரித்திரச் சுற்றுலா, சாகசச் சுற்றுலா, ஓய்வுச் சுற்றுலா, விளையாட்டுச் சுற்றுலா, கேளிக்கை சுற்றுலா, இயற்கை கானகச் சுற்றுலா, கடற்கரைச் சுற்றுலா, பண்ணைச் சுற்றுலா, பண்பாட்டுச் சுற்றுலா என்று எண்ணற்ற வகைகளில் சுற்றுலா வளர்ந்துக்கொண்டே செல்கிறது.

ஒரு நாட்டின் முகமாய் சுற்றுலா இருக்கிறது. முகவரியாய் அந்நாட்டின் சுற்றுலாப் பண்பாடு திகழ்கிறது. இரண்டு விதமான அனுபவங்கள் முக்கியமானவை. ஒன்று நினைவுபடுத்திக்கொள்ளும் அனுபவம்; மற்றொன்று எப்போதும் மகிழ்ச்சியூட்டும் அனுபவம். மகிழ்ச்சியூட்டும் அனுபவம் மட்டுமே சுற்றுலாவைத் தீர்மானிப்பதில்லை. அதை எவ்வாறு நினைவில் வைத்துக்கொள்கிறோம் என்பதைப் பொருத்தே சுற்றுலாவின் அடர்த்தி தீர்மானிக்கப்படுகிறது.

## 2. இந்தியாவில் சுற்றுலா

இந்திய நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் சுற்றுலாவின் வளர்ச்சி முக்கிய பங்களிக்கிறது. 2018 ஆம் ஆண்டில் சுற்றுலாவினால் ஈட்டப்பட்ட வருவாய் ரூ.16.91 லட்சம் கோடி (240 பில்லியன் அமெரிக்க டாலர்) எனவும், இது இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 9.2% பங்களிப்பாகும். இதன் மூலம் 42.673 மில்லியன் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன எனவும், இது மொத்த வேலைவாய்ப்பில் 8.1% ஆகும் எனவும் உலக பயண மற்றும் சுற்றுலா அமைப்பு கூறியுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தி, வருடத்திற்கு 6.9% ஆக

உயர்ந்து 2028 ஆம் ஆண்டில் 9.9% ஆக [ரூ.32.05 லட்சம் கோடி (450 பில்லியன் அமெரிக்க டாலர்)] அடையும் என கணிக்கப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டிற்கான பயண மற்றும் சுற்றுலா போட்டித்திறன் அறிக்கையின்படி, 140 நாடுகளுள் இந்தியா 34 வது இடத்தில் உள்ளது. 2017 ஆம் ஆண்டின் தரவரிசை பட்டியலை ஒப்பிடும்போது, இந்தியா தனது தரவரிசையிலிருந்து தற்போது 6 இடங்கள் முன்னேறியுள்ளது. இது தரவரிசைப்படுத்தப்பட்ட முதல் 25% நாடுகளுள் மிகப்பெரிய முன்னேற்றமாகும். இந்திய சுற்றுலா, சந்தைப்படுத்துதல் போட்டித் திறனில் 140 நாடுகளின் தரவரிசையில் 13–வது இடத்தில் உள்ளது. இது நாட்டின் வளர்ச்சியில் மேம்படுத்தப்பட்ட வான்வழி பயணக்கட்டமைப்பு (33–வது இடம்), சாலை மற்றும் துறைமுக உள்கட்டமைப்பில் (28–வது இடம்) குறிப்பிடுவதாக உள்ளது. நமது நாடு இயற்கை வளங்கள் (14–வது இடம்), கலாச்சார வளங்கள் மற்றும் வணிக பயணம் (8–வது இடம்) ஆகியவற்றிலும் முன்னணியில் உள்ளது.

ஒன்றிய சுற்றுலா அமைச்சகம், பல்வேறு ஒன்றிய அமைச்சகங்கள்/நிறுவனங்கள், மாநில

அரசுகள், யூனியன் பிரதேசங்கள், தனியார் துறை பிரதிநிதிகள் மற்றும் சுற்றுலா பங்குதாரர்களின் ஆலோசனைகள் மற்றும் ஒத்துழைப்புடன் சுற்றுலாவை மேம்படுத்த தேசிய கொள்கையினை வகுக்கிறது. வணிக வாய்ப்புகளை வழங்கும் சுற்றுலாப் பிரிவுகளான கிராமிய சுற்றுலா, சொகுசு கப்பல் சுற்றுலா, மருத்துவ சுற்றுலா மற்றும் சுற்றுச்சூழல் சுற்றுலா ஆகிவற்றை மேம்படுத்த ஒருங்கிணைந்த முயற்சிகளை சுற்றுலா அமைச்சகம் மேற்கொண்டு வருகிறது. இந்தியாவில் சுற்றுலாவை பிரபலப்படுத்த ஒன்றிய சுற்றுலா அமைச்சகம் **"உன்னதமான இந்தியா"** என்ற விளம்பர உத்தியினை பின்பற்றி வருகிறது.

## 3. தமிழ்நாட்டில் சுற்றுலா

தமிழ்நாடு, உலகின் பழமையான கலாச்சாரம், பாரம்பரியம், நினைவுச்சின்னங்கள், சிறப்பான கோயில் கட்டடக்கலை, மனதை மயக்கும் நிலப்பரப்புகளும், வனங்களும் கொண்ட மாநிலமாகும். தமிழ்நாட்டில் யுனெஸ்கோவால் அறிவிக்கப்பட்ட ஐந்து உலக பாரம்பரிய சின்னங்கள் அமைந்துள்ளன. அவை, மாமல்லபுரத்தில் உள்ள நினைவுச்சின்னங்கள், தஞ்சாவூர்–பிரகதீசுவரர் திருக்கோயில், கங்கை

கொண்ட சோழபுரம்–பிரகதீசுவரர் திருக்கோயில், தாராசுரம்–ஐராவதீசுவரர் திருக்கோயில் மற்றும் நீலகிரி மலை ரயில் ஆகியன.

தமிழ்நாட்டில் உள்ள 66,039 கி.மீ நீளமுள்ள மேம்படுத்தப்பட்ட சாலை வசதிகளும், பரந்த ரயில் சேவைகளும் முக்கிய சுற்றுலாத் தலங்களை இணைக்கின்றன. சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய நான்கு பன்னாட்டு விமான முனையங்களும், தூத்துக்குடி மற்றும் சேலத்தில் உள்நாட்டு விமான முனையங்களும் சாதகமான வளர்ச்சித் தொடர்பினை வழங்குகின்றன. சென்னை மற்றும் தூத்துக்குடியில் இரண்டு பெரிய துறைமுகங்களும் உள்ளன.

தமிழ்நாட்டில், சுற்றுலாவை மேம்படுத்தவும், ஊக்குவிக்கவும் சுற்றுலாத்துறையும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் உருவாக்கப்பட்டுள்ளன. நிருவாக அமைப்பு அட்டவணை இணைப்பு–1 மற்றும் இணைப்பு–2–ல் அளிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் நாட்டின் முக்கிய பெருநகரங்களில் சுற்றுலாத் துறையின் கீழ் 38 சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் 22 சுற்றுலா தகவல் மையங்கள் உள்ளன. சுற்றுலாத்

தகவல்களை அளித்தல், பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துதல், கண்காட்சிகள் மற்றும் விழாக்களை நடத்துதல், பயணச் சந்தைகளில் பங்கேற்றல், பிற மாநில சுற்றுலாத் துறைகளுடன் தொடர்பில் இருத்தல் மற்றும் பிற அனைத்து சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் ஆகியவை இந்த அலுவலகங்கள் மூலம் மாநில சுற்றுலாத் துறையால் மேற்கொள்ளப்படும் முக்கியப் பங்களிப்பாகும். சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் சுற்றுலா தகவல் மையங்களின் பட்டியல் இணைப்பு–3 மற்றும் இணைப்பு–4–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்பட்டு வரும் பல்வேறு சுற்றுலாக்கள் மற்றும் தங்கும் விடுதிகள் நடத்துதல் (ஓட்டல் தமிழ்நாடு), உணவகங்கள், படகு இல்லங்கள், தொலைநோக்கி இல்லங்கள் மற்றும் பிற செயல்பாடுகள் சுற்றுலாவை ஊக்குவிக்கவும், மேம்படுத்தவும் உதவுகின்றன.

### 3.1. சுற்றுலாத் துறையின் குறிக்கோள்கள்

- தேசிய மற்றும் உலகளவில் அதிக முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலாத் தலமாக தமிழ்நாட்டினை மேம்படுத்துதல்.

- தொன்றுதொட்டு விளங்கும் வளமான மற்றும் பன்முகத்தன்மை வாய்ந்த பண்பாடு, பாரம்பரியம் மற்றும் கட்டடக்கலை சிறப்பு வாய்ந்த நினைவுச் சின்னங்களை காட்சிப்படுத்துதல்.
- மாநிலத்தில், புதிய சுற்றுலா கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் ஏற்கனவே உள்ள சுற்றுலா உள்கட்டமைப்பினை மேம்படுத்துதல்.
- அதிகம் அறியப்படாத சுற்றுலாத் தலங்களைக் கண்டறிந்து, சுற்றுலாவினை மேம்படுத்துதல்.
- தமிழ்நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு, உலகத்தரம் வாய்ந்த சேவைகளை வழங்குதல்.
- நாட்டின் அந்நியச் செலாவணியினை பெருக்குதல்.
- சுற்றுலாத் தொழில் துறையில், வேலைவாய்ப்புகளுக்கான வழிவகைகளை உருவாக்குதல்.

### 3.2. உத்திகள்

- சுற்றுலா வசதிகள் நிறைந்த அதிமுக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலாச் சுற்றுக்களில் ஒருங்கிணைந்த கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்.
- மேம்படுத்தப்பட்ட இணைப்பு, சுற்றுலா வசதிகள் மற்றும் சுற்றுலா சேவைகளை அதிகரித்தல்.
- பல்வேறு முகமைகளுக்கிடையே ஒத்துழைப்புடன் கூடிய ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல்.
- சுற்றுச்சூழல், பண்பாட்டு பாரம்பரியத்தை நிலைநிறுத்துதல் மற்றும் சமுதாய மேம்பாட்டை உள்ளடக்கிய சுற்றுலாவை மேம்படுத்துதல்.
- சுற்றுலாவில் தனியார் மற்றும் உள்ளூர் மக்களின் பங்கேற்பை ஊக்குவித்தல்.
- திறன் வளர்ச்சி மற்றும் மனிதவள மேம்பாடு, வேலைவாய்ப்பினை பெருக்குதல், வறுமை ஒழிப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மகளிர் மற்றும் நலிவுற்ற சமுதாய மேம்பாடு ஆகியவற்றின் மூலம் நிலையான சுற்றுலா வளர்ச்சி மற்றும் சுற்றுலாத்தல மேம்பாட்டினை செயல்படுத்துதல்.

- உள்நாடு, வெளிநாடுகளில் நடைபெறும் சுற்றுலா சந்தைகள், விளம்பர முகாம்கள் மற்றும் கண்காட்சிகளில் பங்கு கொள்ளுதல்.
- கடற்கரை சுற்றுலாவை மேம்படுத்துதல்.
- சுற்றுச்சூழல் மற்றும் வன உயிரினங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாமல் முழுமையான சூழல் சார்ந்த சுற்றுலாவை மேம்படுத்துதல்.
- சுற்றுலா சார்ந்த கூட்டங்கள், ஊக்கத்தொகை, மாநாடுகள், கண்காட்சிகள் (MICE–Meetings, Incentives, Conventions, Exhibitions) மற்றும் வணிக வாய்ப்புகள் மிகுந்த சுற்றுலாக்களை (Niche Tourism) மேம்படுத்துதல்.

**4. தமிழ்நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகள் வருகை:–**

தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு சுற்றுலாத் தலங்களை காண, வெளிநாடு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் ஏராளமானோர் ஆர்வமுடன் வருகை புரிகின்றனர். தமிழ்நாட்டிற்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளில் பெரும்பான்மையோர் அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரித்தானியாப் பேரரசு, ஆஸ்திரேலியா, கனடா, சீனா, மலேசியா, ஜெர்மனி,

ரஷ்யா, இலங்கை மற்றும் வங்காளதேச நாடுகளை சேர்ந்தவர்கள் ஆவர்.

**தமிழ்நாட்டிற்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் விவரம் : –**

| ஆண்டு | உள்நாடு | வெளிநாடு | மொத்தம் |
|---|---|---|---|
| | (இலட்சத்தில்) | | |
| 2016 | 3438.10 | 47.20 | 3485.30 |
| 2017 | 3450.61 | 48.60 | 3499.21 |
| 2018 | 3859.09 | 60.73 | 3919.82 |
| 2019 | 4948.64 | 68.66 | 5017.30 |
| 2020 # | 140.65 | 12.28 | 152.93 ** |

# – தற்காலிகமானது.

** – ஏப்ரல்–2020 முதல் ஆகஸ்ட்–2020 வரை (ஐந்து மாதங்கள்) ஊரடங்கு காரணமாக சுற்றுலாப் பயணிகள் வருகை இல்லை.

2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில், உள்நாடு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் தமிழ்நாடு, இந்தியாவிலேயே முதல் இடத்தில் உள்ளது. தமிழ்நாடு, 2019 ஆம் ஆண்டில்

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் முதல் இடத்தையும், உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் இரண்டாவது இடத்தையும் பெற்றது. உள்நாடு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்து வருவதில் தமிழ்நாடு ஒரு முன்மாதிரி மாநிலமாக திகழ்கிறது. 2020ஆம் ஆண்டில், கோவிட் கட்டுப்பாடுகள் காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகை வெகுவாக குறைந்துள்ளது.

## 5. பொருட்காட்சிகள் மற்றும் விழாக்கள்

உலகத்திலுள்ள சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் தலைச்சிறந்த நாடுகளில் தமிழ்நாடும் ஒன்றாகும். தமிழகத்தின் பண்பாடு மற்றும் வளமான பாரம்பரியத்தை சுற்றுலாப் பயணிகள் புரிந்துகொள்வதற்கும், பாராட்டுவதற்கும் ஆண்டு முழுவதும் பல கண்காட்சிகள் மற்றும் விழாக்கள் சுற்றுலாத் துறையால் நடத்தப்படுகின்றன.

புகழ்பெற்ற **'இந்திய நாட்டியத் திருவிழா'** ஒவ்வொரு ஆண்டும் மாமல்லபுரத்தில் டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் நடத்தப்படுகிறது. இவ்விழாவில் தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களிலிருந்து பல்வேறு நாட்டியக் கலைஞர்கள் பங்கு பெற்று சிறப்பித்து

வருகின்றனர். இந்நாட்டிய விழாவினை கண்டுகளிக்க ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கில் உள்நாடு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மாமல்லபுரத்திற்கு வருகை புரிகின்றனர்.

கோடை காலங்களில், தமிழ்நாட்டின் முக்கிய கோடை வாசஸ்தலங்களான உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு, வால்பாறை, ஏலகிரி மற்றும் கொல்லிமலை ஆகிய பகுதிகளின் இனிமையான காலநிலையை அனுபவிக்கவும், கண்கவர் இயற்கை அழகை ரசிக்கவும் வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளுக்கு கோடை விழாக்கள் நடத்தப்படுகின்றன. நமது எழுச்சி வாய்ந்த பண்பாட்டினை வெளிப்படுத்தும் விதமாக சுற்றுலாத் தலங்களில் பல்வேறு விழாக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

## 5.1. உள்நாட்டு பயணச் சந்தைகளில் பங்கேற்றல்

தமிழ்நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்திடவும், மாநிலத்தின் சுற்றுலாத் திறனை வெளிப்படுத்திடவும், மற்ற மாநில சுற்றுலாத் துறைகள் மற்றும் புகழ்பெற்ற பயண வர்த்தக நிறுவனங்களால் நடத்தப்படும் உள்நாட்டு பயணச் சந்தைகள் மற்றும் சுற்றுலா

கண்காட்சிகளில் சுற்றுலாத்துறை பங்கேற்று வருகிறது. இந்த பயணச் சந்தைகள் பல்வேறு சுற்றுலா தொழில் புரிவோருக்கிடையிலான கலந்துரையாடல் மற்றும் வாங்குபவர் – விற்பனையாளர் சந்திப்புகளுக்கான களங்களை உருவாக்குகின்றன. இவைகள் தமிழகத்தை மிக முக்கியமான சுற்றுலாத் தலமாக மாற்றும் இலக்கை அடைய உதவுகின்றன. தமிழகத்தின் சுற்றுலா வசதிகளை சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்களுக்கு வெளிப்படுத்தும் வகையில் பல்வேறு மாவட்டங்களில் நடைபெறும் அரசு பொருட்காட்சிகளில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை பங்கேற்கிறது.

5.1.1. **உள்நாட்டு பயணச் சந்தைகள்/ கண்காட்சிகள் 2020–2021**

| பயணச் சந்தைகள் / கண்காட்சிகள் | மாதம் மற்றும் வருடம் |
|---|---|
| பயண மற்றும் சுற்றுலா கண்காட்சி (TTF), கொல்கத்தா | பிப்ரவரி 2021 |
| ADTOI உள்நாட்டு சுற்றுலா பயண முகவர்கள் சங்கத்தின் 10 ஆம் ஆண்டு மாநாடு, அகமதாபாத், குஜராத் | பிப்ரவரி 2021 |
| அவுட்லுக் – நம்பிக்கையூட்டும் சுற்றுலா மாநாடு, கோனார்க், ஒடிசா | பிப்ரவரி 2021 |

| | |
|---|---|
| இந்திய பயணச் சந்தை (ITM), ஜம்மு | மார்ச் 2021 |
| தெற்காசிய பயண மற்றும் சுற்றுலா பரிமாற்றம் (SATTE), கிரேட்டர் நொய்டா, புது தில்லி | மார்ச் 2021 |

### 5.1.2. சர்வதேச பயணச் சந்தைகளில் பங்கேற்றல்

தமிழ்நாட்டின் சுற்றுலா வசதிகள் மற்றும் சுற்றுலாத் தலங்களை காட்சிப்படுத்த சர்வதேச பயணச் சந்தைகளில் சுற்றுலாத் துறை பங்கேற்று வருகிறது. தமிழ்நாட்டின் சுற்றுலாத் தொழில் புரிவோர்களான விடுதியாளர்கள், பயண ஏற்பாட்டாளர்கள், ஆரோக்கிய சுற்றுலா ஊக்குவிப்பாளர்கள் மற்றும் பயண முகவர்கள் இப்பயணச் சந்தைகளில் தமிழ்நாடு சுற்றுலாத் துறையுடன் இணைந்து ஆர்வமுடன் பங்கேற்கின்றனர். இப்பயணச்சந்தைகளில் தமிழ்நாடு சுற்றுலா அரங்கில் தங்கள் வணிகம் சார்ந்த சந்திப்புகளை நடத்துகின்றனர். இதன் விளைவாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது.

## 6. உலக சுற்றுலா தின விழாக் கொண்டாட்டங்கள்

சுற்றுலா மற்றும் அதன் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 27–ஆம் தேதி தமிழ்நாட்டின்

அனைத்து மாவட்டங்களிலும் 'உலக சுற்றுலா தினம்' கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் உலக சுற்றுலா தினம் பற்றிய கருப்பொருளை ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா நிறுவனம் (UNWTO) அறிவிக்கிறது. இவ்விழாவின் போது, சுற்றுலாவை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்வுகளான தூய்மை பிரச்சார முகாம்கள், கருத்தரங்குகள் மற்றும் சிறப்பு பண்பாட்டு நிகழ்ச்சிகள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்படுகின்றன.

கோவிட்–19 தொடர்பான பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக, 2020–ஆம் ஆண்டுக்கான உலக சுற்றுலா தின விழாக்கள் அனைத்து மாவட்டங்களிலும் சுற்றுலா அலுவலர்களால் மெய்நிகர் (Virtual) சந்திப்பின் மூலம் நடைபெற்றன. இந்த கொண்டாட்டங்களில், மாவட்ட நிர்வாகம் மற்றும் பல்வேறு சுற்றுலா சார்ந்த தொழில் துறையினர் பங்கேற்று, சுற்றுலாவின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

### 6.1. பொங்கல் சுற்றுலா விழா

நமது வளமான கலாச்சாரம் மற்றும் பாரம்பரியங்கள் குறித்து சுற்றுலாப் பயணிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த, பொங்கல் பண்டிகை,

ஜனவரி மாதத்தில் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கொண்டாடப்படுகிறது. தமிழகத்தின் இந்த பாரம்பரிய பண்பாட்டு விழாவில் ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பங்கேற்று மகிழ்வர்.

## 7. வெளியீடுகள்–விளம்பரம்

தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாத் தலங்களை மேம்படுத்த, சுற்றுலாத் துறை ஆண்டு முழுவதும் சுற்றுலா தொடர்பான விளம்பரங்களை முன்னணி இதழ்கள், சிறந்த பத்திரிக்கைகள், உள்நாட்டு மற்றும் சர்வதேச விமானப் பத்திரிகைகள் மூலம், விமான நிலையங்கள் மற்றும் ரயில் நிலையங்களில் வெளியிடுகிறது. தமிழ்நாடு சுற்றுலா வணிகச் சின்னம் குறித்து பேஸ்புக், இன்ஸ்டாகிராம், ட்விட்டர், யூ–டியூப், லிங்க்டு–இன் போன்ற மின்னணு சமூக வலைதளங்களில் சந்தைப்படுத்தப்பட்டு பிரபலப்படுத்தப்படுகிறது.

பன்னாட்டு இதழ்கள் மற்றும் விமானங்களில் வழங்கப்படும் பயண இதழ்களான காண்டி நாஸ்ட் டிராவலர், டிராவல்+லீசர் (இந்தியா மற்றும் தெற்காசியா), இன்டெஸ் (பிரெஞ்சு), ஸ்பைஸ் ரூட் (ஸ்பைஸ் ஜெட் ஏர்வேஸ்), கல்ஃப் ஏர், டிஜிட்டல்

டூரிசம் மேகசின் (டிராவல் மற்றும் டூர் வேர்ல்டு) போன்ற இதழ்களிலும் விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன.

உள்நாட்டு விமான இதழ்கள் மற்றும் பயண இதழ்களான சுப யாத்ரா (ஏர் இந்தியா), அவுட்லுக், அவுட்லுக் (பிசினஸ்), அவுட்லுக் டிராவலர், விமன்ஸ் இரா (இந்தி), கிரகலட்சுமி, டிராவல் ஹைட்ஸ், சுவர் சரிதா, கிரிஹ சோபா, தி வீக், லோன்லி பிளானட், நேசனல் ஜியாகரபிக் டிராவலர் (இந்தியா), டிராவல் ஸ்கேப்ஸ் மற்றும் அபியான் (குஜராத்தி) போன்றவற்றிலும் தமிழ்நாடு சுற்றுலா குறித்த விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன.

முதன்முறையாக, அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் சுற்றுலா தகவல் மையங்களில் ஒளிரும் விளம்பரப் பலகைகள் பொருத்தப்பட்டுள்ளன. முக்கிய சுற்றுலாத் தலங்களில் அலைபேசி மூலம் புகைப்படம் எடுப்பதற்கான செல்ஃபி (Selfie) விளம்பர மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மின்னணு ஊடக வாயிலாக வெளியிடப்பட்ட விளம்பரங்கள், சுற்றுலாவின் வளர்ச்சியில் நேர்மறை தாக்கத்தை ஏற்படுத்தவும், உள்நாடு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள்

வருகையை அதிகரிக்கவும் பங்களித்துள்ளன. இந்த விளம்பர உத்தியின் மூலம் தமிழ்நாட்டிற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது.

சுற்றுலா விளம்பர கையேடுகளான "டிஸ்கவர் தமிழ்நாடு", "சுற்றுலா கடவுச் சீட்டு புத்தகம்" மற்றும் "தமிழ்நாடு சுற்றுலா வரைபடம்" தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ளது. அவை, ஜப்பான், பிரெஞ்சு, ஜெர்மனி, சீனா, ரஷ்யா மற்றும் ஸ்பானிஷ் ஆகிய அயல்நாட்டு மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இந்த சுற்றுலாக் கையேடுகள், உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் நடைபெறும் சுற்றுலா பயணச் சந்தைகளுக்கு வருகைப்புரியும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் சுற்றுலா தொழில் சார்ந்தவர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு சுற்றுலா குறும்படங்கள், உள்நாடு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாச் சந்தைகளில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு சுற்றுலா அரங்கிற்கு வரும் பார்வையாளர்களுக்கு தகவல் பதிவியில் (Pen Drive) வழங்கப்பட்டன.

### 7.1. வரவேற்பறை புத்தகங்கள் (Coffee Table Books)

தமிழ்நாட்டில் உள்ள யுனெஸ்கோ பாரம்பரிய சின்னங்கள், கோயில்கள், இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த சுற்றுலாத் தலங்கள், பாரம்பரிய நினைவுச் சின்னங்கள் ஆகியவற்றை பிரபலப்படுத்தும் விதமாக சிறப்பு வரவேற்பறை புத்தகங்கள் (Coffee Table Books) அச்சிடப்பட்டு நம் நாட்டில் உள்ள தூதரகங்கள், துணைத் தூதரகங்கள் மற்றும் பிற சுற்றுலா தொழில் சார்ந்தவர்களுக்கு விநியோகிக்கப்பட்டன. விஷ்ணுவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட 108 வைணவ திவ்யதேசத் தலங்களில் உள்ள கோவில்களில் முக்கியமானவற்றை பிரபலப்படுத்தும் வகையில் வரவேற்பறை புத்தகங்கள் அச்சிடப்பட்டு, பல்வேறு சுற்றுலாச் சார்ந்த தொழில் துறையினருக்கு விநியோகிக்கப்பட்டன.

## 8. மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் நுட்பவியல் நிறுவனம், துவாக்குடி, திருச்சிராப்பள்ளி

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துவாக்குடியில் அமைந்துள்ள உணவு கைவினைத் தொழில் நிறுவனம் 01–10–1981 அன்று இந்திய அரசால்

நிறுவப்பட்டது. இந்நிறுவனம் 15–12–1998 அன்று மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் நுட்பவியல் நிறுவனமாக (State Institute of Hotel Management and Catering Technology) தரம் உயர்த்தப்பட்டது. இது 1975 ஆம் ஆண்டின் தமிழ்நாடு சங்கங்களின் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்நிறுவனம் இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு நிதி உதவிகளுடன் நடத்தப்பட்டு வருகிறது. இந்நிறுவனம் பின்வரும் படிப்புகளை நடத்தி வருகிறது.

- உணவக மேலாண்மை மற்றும் உணவாக்க தொழில் நுட்பவியல் பற்றிய மூன்றாண்டு பட்டப்படிப்பு.
- உணவு தயாரிப்பு, உணவு மற்றும் பானங்கள் பரிமாறுதல், தங்குமிட பராமரிப்பு, அடுமனை பொருட்கள் மற்றும் இனிப்பு வகைகள் தயாரித்தல் பற்றிய ஒன்றரை ஆண்டு பட்டயப் படிப்பு.
- உணவு தயாரிப்பு, உணவு மற்றும் பானங்கள் பரிமாறுதல், தங்குமிட பராமரிப்பு, அடுமனை பொருட்கள் மற்றும் இனிப்பு வகைகள் தயாரித்தல் பற்றிய சான்றிதழ் படிப்பு.

இப்படிப்புகளைத் தவிர ஒன்றிய அரசின் '**ஹுனார் சே ரோஜ்கார்'** திட்டத்தின் கீழ் குறுகிய காலப் பயிற்சிகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன. உத்தரபிரதேச மாநிலம் நொய்டாவில் உள்ள உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் நுட்பவியலுக்கான நிறுவனங்களின் தேசியக் குழு (NIHMCT) இந்நிறுவனத்தை ஓர் உறுப்பு நிறுவனமாக இணைத்துக் கொண்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் இந்நிறுவனத்தின் பராமரிப்பு செலவினம் போன்றவற்றிற்காக தொடர் மானியமாக ரூ.5.00 இலட்சம் மாநில அரசால் வழங்கப்படுகிறது. திறன் வகுப்பறை (Smart Classroom), மாநாட்டரங்கம், ஆசிரியர்கள் அறை, பயிற்சி உணவகம், மாணவர்களுக்கான பயிற்சி சமையலறை, அடுமனைப் பயிற்சி துறை, புதிய உபகரணங்கள், அறைகலன்கள் மற்றும் வகுப்பறைகள் போன்ற நவீன வசதிகளுடன் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் இந்நிறுவனம் மாநில அரசு நிதி உதவியுடன் சமீபத்தில் தரம் உயர்த்தப்பட்டது.

**9. சுற்றுலா பாதுகாப்பு அமைப்பு**

பாதுகாப்பான மற்றும் வசதியான பயணத்தை உறுதி செய்யும் நோக்கத்துடன், சுற்றுலாப்

பயணிகளுக்கு இயன்ற வரை அவர்களின் தாய்மொழியில் தேவையான தகவல்களை வழங்குதல், சுற்றுலாத் தலங்கள் தொடர்பான தகவல்கள் வழங்குதல், வழிகாட்டுதல், நெரிசல் காரணமாக அல்லது புதிதாக வருகை தரும் இடத்தில் சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்படும் எதிர்பாராத நிகழ்வுகளில் உதவி செய்தல் ஆகிய சேவைகளை வழங்க தனியாக சுற்றுலா பாதுகாப்பு அமைப்பானது சுற்றுலாத் துறையின் கீழ் செயல்படுகிறது.

தற்போது இந்த அமைப்பு தமிழ்நாட்டில், மாமல்லபுரம், உதகமண்டலம், கொடைக்கானல், இராமேஸ்வரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஐந்து சுற்றுலாத் தலங்களில் செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பின் தலைவராக ஒரு முதன்மை சுற்றுலா பாதுகாவலர் சென்னையில் தலைமையிடத்திலும், ஐந்து சுற்றுலாத் தலங்களில் தலா ஒரு நிலைய சுற்றுலா பாதுகாவலரும், தலா ஐந்து சுற்றுலா பாதுகாவலர்களும் பணிபுரிந்து வருகின்றனர். இந்த அமைப்பில் தற்போது மொத்தம் 31 பணியாளர்கள் உள்ளனர். சுற்றுலா பாதுகாப்பு அமைப்பின் இச்செயல்பாடுகள் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொது மக்களின் பாராட்டைப் பெற்றுள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் மதிப்பீடு மற்றும் வேண்டுகோளின் அடிப்படையில் மதுரை, திருச்சிராப்பள்ளி, காஞ்சிபுரம், தஞ்சாவூர் மற்றும் ஏற்காடு ஆகிய சுற்றுலாத் தலங்களில் சுற்றுலா பாதுகாப்பு அமைப்பினை விரிவுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், மாமல்லபுரம், கொடைக்கானல், இராமேஸ்வரம் ஆகிய சுற்றுலாத் தலங்களில் தற்போது செயல்பட்டுவரும் சுற்றுலா பாதுகாப்பு அமைப்பில் கூடுதல் பணியாளர்களை பணிநியமனம் செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

## 10. சுற்றுலா உள்கட்டமைப்பு

### 10.1. மாநில அரசு நிதியுதவி திட்டங்கள்

தமிழ்நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் பயன்பெறும் வகையில், சுற்றுலாப் பயணிகளுக்கு சுகமான அனுபவத்தையும், தரமான வசதிகளையும் வழங்க சுற்றுலாத் தலங்களில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக மாநில சுற்றுலாத் துறை மூலம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு வருகிறது. இந்த நிதி ஒப்பளிப்பு மூலம் ஓய்வுக்கூடங்கள், கழிப்பறைகள், அணுகு சாலைகள், உடைமாற்றும் அறைகள், வாகன நிறுத்துமிடம், குடிநீர் வசதி, வழிகாட்டிப்

பலகைகள், மின்விளக்கு வசதிகள் போன்ற முக்கிய திட்டப்பணிகள் சுற்றுலாத் தலங்களில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

2020–2021 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் சுற்றுலாத் தலங்களில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் செய்வதற்கும் அணுகு சாலை அமைப்பதற்கும் பின்வரும் திட்டங்களுக்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

### 10.1.1. உள்கட்டமைப்பு வசதி திட்டங்கள்–2020–2021

| வ. எண். | திட்டத்தின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | ஈரோடு மாவட்டம், கோபிச்செட்டிபாளையம், குண்டேரிப்பள்ளம் அணைக்கட்டு பகுதியில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளுதல் | 130.17 |
| 2. | தூத்துக்குடி மாவட்டம், கழுகுமலையில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளுதல் | 50.00 |
| 3. | தென்காசி மாவட்டம், குற்றாலம் கலைவாணர் அரங்கத்தை புதுப்பித்தல் மற்றும் பேரருவி பகுதியில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளுதல் | 155.00 |

| | | |
|---|---|---|
| 4. | சேலம் மாவட்டம், குமரகிரி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் பகுதியில் ஓய்வுக்கூடம் அமைத்தல், கழிப்பறை கட்டுதல் | 73.00 |
| 5. | மாமல்லபுரத்தில் ஒலி–ஒளிக் காட்சி அமைத்தல் | 500.00 |
| 6. | ஈரோடு மாவட்டம் அருள்மிகு திட்டமலைக் குழந்தை குமாரசாமி கோயில் பகுதியில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளுதல் (எஞ்சிய தொகை) | 17.90 |
| | **மொத்தம்** | **926.07** |

## 10.1.2. சாலை மேம்பாட்டுப் பணிகள் – 2020–2021

| **வ. எண்.** | **திட்டத்தின் பெயர்** | **ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ.இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1. | ஈரோடு மாவட்டம், குண்டேரிப்பள்ளம் அணைக்கட்டு பகுதியில் அணுகு சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளுதல் | 56.23 |
| 2. | தூத்துக்குடி மாவட்டம், கழுகுமலையில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளுதல் | 50.00 |

| | | |
|---|---|---|
| 3. | நாமக்கல் மாவட்டம், அருள்மிகு நைனாமலை வரதராஜ பெருமாள் திருக்கோயில் மலைப்பாதை மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாடு செய்தல் | 542.17 |
| 4. | சேலம் மாவட்டம், குமரகிரி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் பகுதியில் மலைப்பாதை அமைத்தல் | 393.77 |
| | **மொத்தம்** | **1042.17** |

## 10.2. ஒன்றிய அரசின் நிதியுதவி திட்டங்கள்

### 10.2.1. சுவதேஷ் தர்ஷன் திட்டம்

ஒன்றிய அரசின் சுற்றுலா அமைச்சகம் சுற்றுலாத் தலங்களில் உலகத்தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதன் மூலம் சுற்றுலாப் பயணிகளுக்கு வளமான சுற்றுலா அனுபவத்தை பெறவும், கருப்பொருள் சார்ந்த சுற்றுலா சுற்றுக்களை மேம்படுத்தும் நோக்கத்தோடு "சுவதேஷ் தர்ஷன்" திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் அடையாளம் காணப்பட்ட கடற்கரை சுற்றுலாத் தலங்கள்:

1. சென்னை (மெரினா கடற்கரை மற்றும் பெசன்ட் நகர் கடற்கரை)
2. மாமல்லபுரம் கடற்கரை

3. இராமேஸ்வரம் கடற்கரை
4. குலசேகரபட்டினம் கடற்கரை மற்றும்
5. கன்னியாகுமரி
    - கன்னியாகுமரி கடற்கரை
    - திரிவேணி சங்கமம் கடற்கரை
    - தெற்குறிச்சி கடற்கரை
    - மணக்குடி கடற்கரை

மேற்கண்ட கடற்கரை சுற்றுலாத் தலங்களில் நிலச்சீரமைப்பு, மின்விளக்குகள் வசதி அமைத்தல், சுற்றுலா தகவல் மையம், பொது கழிப்பிடங்கள் உருவாக்குதல், நடைபாதை வசதிகள், நடைபாதை மேம்பாடு, கடற்கரை முகப்புப்பகுதி மேம்பாடு, மீட்புப் படகுகள், கடற்கரை சுத்தம் செய்யும் இயந்திரம், ஜெட் ஸ்கி (Jet Ski) படகு, நிலத்திலும் நீரிலும் செல்லும் வாகனம் (Amphicraft), 'வை–ஃபை' கம்பியில்லா இணைய அலை வசதி (Wi–Fi), கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துதல், தகவல் பலகைகள், முதலுதவி வசதிகள் ஏற்படுத்துதல் போன்ற பணிகள் ரூ.73.13 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

## 10.3. ஆசிய வளர்ச்சி வங்கித் திட்டம்

சுற்றுலா அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டு முதலீட்டுத் திட்டம் தொகுதி–4, ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் 70 சதவிகித திட்ட மதிப்பீட்டை ஆசியவளர்ச்சி வங்கி வழங்குகிறது. 30 சதவிகித திட்ட மதிப்பீடு தமிழ்நாடு அரசால் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் மொத்தம் 13 தொகுப்புப் பணிகள் உள்ளன. அதில் 11 தொகுப்புப் பணிகள் ரூ.164.07 கோடி திட்ட மதிப்பீட்டில் முடிவடைந்துள்ளன. அப்பணிகள் விவரம் வருமாறு :

1. ஆற்றல் சேமிப்பு மின்விளக்குகள் (LED) அமைத்தல்
2. இரவில் ஒளிரும் வழிகாட்டிப் பலகைகள் அமைத்தல்
3. ஆலங்குடியில் சுற்றுலா ஓய்வு இல்லம் கட்டுதல், வேதாரண்யம் அருள்மிகு வேதாரண்யேஸ்வரர் திருக்கோயிலுக்கு அடிப்படை வசதிகள் செய்தல்.
4. தருமபுரி மாவட்டம் ஒகேனக்கலில் சுற்றுலா ஓய்வு விடுதி மற்றும் தகவல் மையம் கட்டுதல்.

5. காஞ்சிபுரத்தில் பக்தர்களுக்கான சுற்றுலா ஓய்வு இல்லம் கட்டுதல்.
6. காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூரில் ஸ்ரீஇராமானுஜர் பிறந்த இடத்தில் சுற்றுலா தகவல் மையம், அரங்கம், பண்பாட்டு மையம் மற்றும் இதர வசதிகள் அமைத்தல்.
7. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு இரண்டு வால்வோ பேருந்துகள் மற்றும் 129 படகுகள் வாங்குதல்
8. கன்னியாகுமரி மாவட்டம், விவேகானந்தர் நினைவு இல்லம் செல்வதற்கு இரண்டு படகுகள் (75 இருக்கை வசதியுடன் ஒன்று, 150 இருக்கை வசதியுடன் ஒன்று) வாங்குதல்.
9. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களில் சூரியசக்தி விளக்குகள் அமைத்தல்.
10. மாநில தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 12 முக்கிய நினைவுச் சின்னங்களை பாதுகாத்து புனரமைக்கும் பணிகள்.
11. சென்னை எழும்பூரிலுள்ள அரசு அருங்காட்சியக மேம்பாட்டுப் பணிகள்

சுற்றுலாப் பயணிகளிடையே தகவல்களை வழங்கும் இணையவழி முன்பதிவிற்கு அதிகளவில் வரவேற்பு உள்ளதால், அதற்கென ஓர் இணையதளமும், கைபேசி செயலியும் தொடங்கப்பட்டுள்ளன. சுற்றுலா மேம்பாட்டு மென்பொருள் சாதனங்களை (இணையதளம், கைபேசி செயலி) வடிவமைத்து உருவாக்குதல், சிதம்பரத்தில் பக்தர்களுக்கு சுற்றுலா தங்கும் விடுதி கட்டும் பணிகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன. அப்பணிகள் விரைவில் முழுமையாக நிறைவேற்றப்படும்.

### 10.3.1. சுற்றுலாத் துறைக்கு புதிய கைபேசி செயலி மற்றும் இணையதளம்

கைபேசி செயலி மற்றும் இணையதளத்தில் சுற்றுலாத் தலங்கள், ஓட்டல்கள், நடைபெறும் விழாக்களின் விவரங்கள் குறித்த படங்கள் மற்றும் வீடியோக்கள் ஆகிய விவரங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்கள், படகுஇல்லம் மற்றும் சுற்றுலாக்களுக்கான முன்பதிவு செய்யும் வசதியும் ஏற்படுத்தப்படும். அதிநவீன மற்றும் சுலபமாக கையாளக்கூடிய "சுற்றுலா நண்பன் செயலி" சுற்றுலா தலங்களை எளிதில் தெரிந்து

கொள்வதற்கும், முன்பதிவு செய்வதற்கும், கலந்துரையாடல்களில் பங்குகொண்டு தங்களது இனிமையான அனுபவங்களை மற்ற சுற்றுலாப் பயணிகளுடன் பகிர்ந்து கொள்ளவும் உதவுகிறது. இதனால் அதிகளவில் சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டிற்கு வருகை புரிவதற்கு ஊக்கமளிக்கிறது.

புதிய சுற்றுலாத் தலங்களை அறிமுகம் செய்தல், புதிய திட்டங்கள், சாகசப் பயணங்கள், தொகுப்பு திட்டங்கள் ஆகியவற்றை சுற்றுலாப் பயணிகளுக்கு தெரிவிக்கும் வகையிலும் இந்த இணைய வசதி அமையும். தேவையான அனைத்து தகவல்கள், உதவி, வழிகாட்டுதல் குறித்த விவரங்களை தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் இந்த விவரங்கள் இடம்பெறும்.

## 10.4. முன்மொழியப்பட்ட திட்டங்கள்

### 10.4.1. மாமல்லபுரம் நினைவுச்சின்ன தல மேம்பாடுத் திட்டம் (ICONIC SITE)

ஒன்றிய அரசின் சுற்றுலா அமைச்சகம் 'நினைவுச்சின்ன தலமாக' தேர்ந்தெடுத்துள்ள மாமல்லபுரத்தை மேம்படுத்த ரூ.461.22 கோடி மதிப்பீட்டில் ஆரம்பகட்ட திட்ட அறிக்கை ஆலோசகர் அமைப்பு மூலம் தயார் செய்யப்பட்டுள்ளது. இத்திட்ட

அறிக்கை, ஒன்றிய அரசின் சுற்றுலா அமைச்சகத்தின் மூலம் நிதி ஒதுக்குவதற்கு பரிசீலனையில் உள்ளது.

### 10.4.2.பிரசாத் (PRASADH) திட்டத்தின் கீழ் இராமேஸ்வரம் மேம்பாடு

ஒன்றிய அரசின் சுற்றுலா அமைச்சகம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆன்மீக சுற்றுலாத் தலங்களில், நன்கு திட்டமிடப்பட்ட சுற்றுலா உள்கட்டமைப்புகளை வழங்குவதற்காக, 'புனித யாத்திரை புத்தாக்கம் மற்றும் ஆன்மீகப் பெருக்குதல்' (Pilgrimage Rejuvenation and Spiritual, Heritage and Augmentation Drive – PRASHAD) என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இராமேஸ்வரம் தேர்வு செய்யப்பட்டு, அங்கு கூடுதல் வசதிகள் செய்வதற்கு ஆலோசகர் அமைப்பு மூலம் விரிவான திட்ட மதிப்பீட்டு அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. இக்கருத்துருவிற்கான நிதி ஒதுக்கீடு ஒன்றிய அரசின் சுற்றுலா அமைச்சகத்தின் பரிசீலனையில் உள்ளது.

## 11. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தமிழகத்தின் முக்கிய சுற்றுலாத் தலங்களின் உள்கட்டமைப்பை மேம்படுத்தவும், அவ்விடங்களுக்கு சுற்றுலாக்களை நடத்தவும் 30.06.1971 அன்று நிறுவப்பட்டது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 53 ஓட்டல்கள், படகு இல்லங்கள், தொலைநோக்கி இல்லங்களை இயக்குவதோடு, தொகுப்பு சுற்றுலாக்கள், பொருட்காட்சிகள் மற்றும் சுற்றுலா விழாக்களை நடத்துகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் 14 சொகுசு பேருந்துகள் உள்ளன. இதன் மூலம் பல்வேறு வகையான தொகுப்பு சுற்றுலாக்கள் தேவைக்கு ஏற்ப தமிழ்நாட்டிற்குள்ளும் மற்றும் வெளி மாநிலங்களுக்கும் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு போன்ற முக்கிய கோடைவாசஸ்தலங்களில், மாணவர்கள் மற்றும் குறைந்த செலவில் (Budget Tourist) சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவு செய்திட, இளைஞர் விடுதிகளையும் நடத்துகிறது.

## 12. ஓட்டல் பிரிவு

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 53 ஓட்டல்களை தன்னகத்தே கொண்டுள்ளது. அதில் 25 ஓட்டல்களை நேரடியாக நிருவகித்தும், மற்ற ஓட்டல்களை தனியாருக்கு குத்தகைக்கு விட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகள்/விருந்தினர்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் தேவைகளை நிறைவேற்றுவதற்காக, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தனது நிர்வாகத்தின் கீழுள்ள அனைத்து ஓட்டல்களின் தரத்தையும் மேம்படுத்துவதற்காக நிலையான நடவடிக்கைகளையும் உறுதியான முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களில் பணிபுரியும் பணியாளர்களின் செயல்பாட்டுத் திறன்கள் மற்றும் மேலாண்மை ஆற்றல்களை மேம்படுத்தும் பொருட்டு, இக்கழகத்தில் பணிபுரியும் ஓட்டல் பிரிவு ஊழியர்களுக்கு உணவு உற்பத்தி, ஓட்டல் பராமரிப்பு சேவை மற்றும் வரவேற்பறை உபசரிப்புகள் குறித்த பயிற்சி போன்றவை, ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவி திட்டத்தின் மூலம் முன்னணி விருந்தோம்பல் பயிற்சியாளர்களால் அளிக்கப்பட்டது.

திருச்சி, துவாக்குடியில் உள்ள மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்க தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் மூலம் இராமேஸ்வரம் மற்றும் கன்னியாகுமரியில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு உணவக பணியாளர்களுக்கு திறன் ஆய்வு மற்றும் சான்றிதழ் பயிற்சி அளிக்கப்பட்டது.

## 12.1.தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக 'ஓட்டல்களை மேம்படுத்துதல்

ஆசிய வளர்ச்சி வங்கி நிதியிதவி திட்டத்தின் மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கீழ் இயங்கும் ஓட்டல்களில் பல்வேறு வகையான உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணியானது, ஓட்டல் தமிழ்நாடு ஒகேனக்கலில் 4 புதிய சொகுசு அறைகளுடன் சுற்றுலா மாளிகையை மேம்படுத்துதுல், திருச்சிராப்பள்ளியில் புதிய 15 அறைகள் கொண்ட சுற்றுலா உணவகம் மற்றும் விருந்தினர் அரங்கம் அமைத்தல், கன்னியாகுமரியில் உள்ள சுற்றுலா "பாரம்பரிய மையத்தினை" புனரமைத்தல், சிதம்பரத்தில் யாத்ரிகர்கள் ஓய்வு விடுதி, பெரிய அளவிலான ஓய்வு அறை மற்றும் இதர

அடிப்படை வசதிகளுடன் கூடிய சுற்றுலா வரவேற்பு மையம் ஆகிய கட்டுமானங்களை உள்ளடக்கியது.

### 13. படகு குழாம்கள்

படகு சவாரி மற்றும் சாகச நீர் விளையாட்டுகள் நடத்துவதற்கு உகந்த பல நீர்நிலைகள் உள்ளடக்கிய இல்லமாக தமிழ்நாடு திகழ்கிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவில் நீங்காத படகு சவாரி அனுபவத்தினை வழங்குகிறது. இதற்கு ஏதுவாக சாகச படகு சவாரி மற்றும் நீர் விளையாட்டுகளுடன் கூடிய படகு குழாம்களை முட்டுக்காடு, முதலியார்குப்பம், உதகமண்டலம், பைக்காரா, கொடைக்கானல், ஏற்காடு, பிச்சாவரம் மற்றும் குற்றாலம் ஆகிய இடங்களில் இயக்கி வருகிறது.

தற்போதுள்ள உள்கட்டமைப்புகள், சேவைகளை மேம்படுத்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவி திட்டத்தின் கீழ், நவீன படகுகள் மற்றும் இதர உபகரணங்களை வாங்கியுள்ளது.

- 108 மிதி படகுகள் மற்றும் விசைப்படகுகள்

- 18 இயந்திர படகுகள் மற்றும் அதிவேக படகுகள்
- 4 வாட்டர் ஸ்கூட்டர்கள்
- 27 அவுட் போர்டு மோட்டார்கள்
- 124 உயிர் காக்கும் சாதனங்கள்

கன்னியாகுமரி படகுத் துறையிலிருந்து விவேகானந்தர் நினைவு பாறை மற்றும் அய்யன் திருவள்ளுவர் சிலையை சுற்றுலாப் பயணிகள் சென்று பார்வையிட வசதியாக ரூ.8.24 கோடியில் 2 புதிய பயணிகள் படகுகள் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியின் மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் வாங்கப்பட்டு, பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

### 13.1. படகு குழாம் பணியாளர்களுக்கு திறன் மற்றும் பயிற்சி வழங்குதல்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு சொந்தமான படகு இல்லங்களில் பாதுகாப்பான மற்றும் சிறப்பான சுற்றுலா அனுபவத்தை உறுதி செய்ய பல்வேறு முயற்சிகளை சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மேற்கொண்டு வருகிறது. தொடர்ச்சியான திறன் மேம்பாட்டு முயற்சிகளின் ஒரு பகுதியாக திறன் மேம்பாட்டு வகுப்புகள், பட்டறைகள், நீர் சாகச

விளையாட்டு பயிற்சி மற்றும் சுற்றுலா பயிற்சி திட்டங்கள் தொடர்ந்து பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

முட்டுக்காடு மற்றும் முதலியார்குப்பம் படகு குழாம்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு பல்வேறு வகையான நீர் சாகச வழிகாட்டு நெறிமுறைகள் குறித்த பயிற்சி, முதலுதவி பயிற்சி, மீட்பு பணி யுக்திகள், அவசரகால நிலைகளை கையாளுதல், படகுகளை பழுது பார்ப்பது மற்றும் பராமரிப்பது போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

### 13.2. படகு குழாம், முட்டுக்காடு

முட்டுக்காடு படகு குழாமானது, சென்னை, செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் வசிக்கும் மக்களின் வார விடுமுறை நாட்களை கழிப்பதற்கு மிகச் சிறந்த பொழுதுபோக்கு தலமாக விளங்குகிறது. இது நினைவில் நீங்காத படகு சவாரி அனுபவங்களை அளிக்கிறது. இந்த படகு குழாம் சென்னையிலிருந்து மாமல்லபுரம் செல்லும் சாலையில் முட்டுக்காடு எனும் இடத்தில் அமைந்துள்ளது. இங்கு இயந்திர படகு, துடுப்புப் படகு, விரைவுப் படகு மற்றும் வாட்டர் ஸ்கூட்டர்கள் போன்ற படகுகள் உள்ளன. இவ்விடம் ஒரு நாள் முழுவதும்

செலவிடக்கூடிய சுற்றுலா மற்றும் பொழுது போக்கிற்கான வசதிகளை கொண்டுள்ளது. இங்கு சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய ஓர் உணவகமும் செயல்பட்டு வருகிறது. வார இறுதி நாட்களில் சுமார் 4000–க்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகை புரிகின்றனர். கடந்த 2020–2021 ஆம் ஆண்டு முட்டுக்காடு படகு குழாமிற்கு சுமார் 94,073 சுற்றுலாப் பயணிகள் வருகை புரிந்துள்ளனர்.

### 13.3. படகு குழாம், முதலியார் குப்பம்

முதலியார்குப்பம் படகு குழாமை "மழைத்துளி படகு குழாம்" என்றும் அழைப்பர். இவ்விடம் மிகவும் இயற்கையான சூழலில் அமையப்பெற்று பறவைகளைப் பார்வையிடுவோர்களின் சொர்க்கமாகவும் விளங்குகிறது. சென்னையிலிருந்து கிழக்குக் கடற்கரை சாலையில் 92 கி.மீ. தொலைவிலும், மாமல்லபுரத்திற்குத் தெற்கே 36 கி.மீ. தொலைவிலும் இவ்விடம் அமைந்துள்ளது. இது புலம் பெயரும் பறவைகளின் சொர்க்கமாகவும் உள்ளது.

ஓடியூர் ஏரியை ஒட்டியுள்ள கடற்கரைத் தீவிற்கு இயந்திரப் படகு மூலம் சென்று வர ஏற்பாடு

செய்து தரப்படுகின்றது. சுற்றுலாப் பயணிகள் இந்தத் தீவில் சில மணி நேரம் தங்கி, இயற்கைச் சூழலை கண்டுகளிக்க வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும், அங்கு அமைந்துள்ள சிற்றுண்டி உணவகத்தில் சுற்றுலாப் பயணிகளுக்கு வேண்டிய சுவை மிகுந்த உணவு வகைகள் கிடைக்கும். நீர் விளையாட்டு வசதிகள் கொண்ட முதலியார்குப்பம் படகு குழாமில் துடுப்புப் படகு, மிதி படகு, ஓரிருக்கை படகு (Kayak), வாழைப்பழ வடிவிலான படகு, வாட்டர் ஸ்கூட்டர் மற்றும் விசைப்படகு, அதிவேக ஜெட் ஸ்கி (Jet Ski) போன்ற படகுகள் உள்ளன. கடந்த 2020–2021 ஆம் ஆண்டு முதலியார்குப்பம் படகு குழாமிற்கு சுமார் 29,641 சுற்றுலாப் பயணிகள் வருகை புரிந்துள்ளனர்.

## 13.4. படகு குழாம், உதகமண்டலம்

நீலகிரி "மலைகளின் ராணி" என்று அழைக்கப்படும் உயிரினப் பல்வளமையின் பொக்கிஷமாக உள்ளது. 85 ஏக்கர் பரப்பளவில் நகரின் நடுவே அமைந்துள்ள ரம்மியமான உதகமண்டலம் ஏரி சுற்றுலாப் பயணிகளைக் கவரும் ஒரு முக்கிய சுற்றுலாத்தலமாகும். எழில் மிகுந்த இருப்பிடம் மற்றும் இயற்கை காட்சிகள் சூழ்ந்த பின்னணியில் இந்த ஏரியின் படகு சவாரி

உதகமண்டலத்தின் பிரதான சுற்றுலா அம்சமாக உள்ளது. இந்தப் படகு குழாமில் மிதி படகு, துடுப்புப் படகு மற்றும் விசைப் படகு போன்ற படகுகள் உள்ளன. மேலும் இங்குள்ள உணவகத்தில் பல்வேறு உள்ளூர் உணவு வகைகளை உண்டு மகிழலாம். இங்குள்ள அழகான பூங்காவையும் இயற்கை எழில்களையும் கண்டுகளிக்க சிறிய தொடர்வண்டி வசதியும் இந்த படகு குழாமிற்கு மேலும் மெருகூட்டுகின்றன. கடந்த 2020–2021 ஆம் ஆண்டு உதகமண்டலம் படகு குழாமிற்கு சுமார் 3,24,866 சுற்றுலாப் பயணிகள் வருகை புரிந்துள்ளனர்.

### 13.5. படகு குழாம், பைக்காரா

உதகமண்டலம் – மைசூர் சாலையில், உதகமண்டலத்திலிருந்து 21 கி.மீ. தொலைவில் அடர்ந்த காடுகளின் நடுவே பைக்காரா நீர்த்தேக்கம், எழில் கொஞ்சும் சூழலில் அமைந்துள்ளது. இந்த நீர்த்தேக்கம் அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் சுற்றுலா மையமாக அமைந்துள்ளது. இங்கு இயந்திரப் படகு, அதிவேகப் படகு போன்ற படகுகள் மற்றும் உணவகம் ஆகியவை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் இயக்கப்படுகின்றன. இந்த படகு சவாரி, அந்தபகுதியின் இயற்கை எழிலை

முழுமையாக அனுபவிக்க ஏதுவாக உள்ளது. இங்கு உள்ள உணவகத்தில் சுவையான சிற்றுண்டிகள் மற்றும் தின்பண்டங்கள் பரிமாறப்படுகின்றன.

சுத்தமான நீர்த்தேக்கத்தில் அமைந்துள்ள பைக்காரா படகு குழாம், சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவரும் அம்சமாக அமைந்துள்ளது. சுற்றுச் சூழலுக்கு உகந்த உலர் கழிப்பறை வசதிகள் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக அமைக்கப்பட்டுள்ளன. கடந்த 2020-2021 ஆம் ஆண்டு பைக்காரா படகு குழாமிற்கு சுமார் 42,209 சுற்றுலாப் பயணிகள் வருகை புரிந்துள்ளனர்.

## 13.6. படகு குழாம், கொடைக்கானல்

"மலைகளின் இளவரசி" என்று அழைக்கப்படும் கொடைக்கானல், ஒரு சிறந்த சுற்றுலாத் தலமாகும். 12 வருடங்களுக்கு ஒரு முறை மட்டுமே பூக்கும் குறிஞ்சி மலர் இங்கு புகழ்பெற்றது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இங்கு இரண்டு படகு குழாம்களை நடத்துகிறது. சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வண்ணமாக, 59 ஏக்கர் நிலப்பரப்பில் செயற்கையாக வடிவமைக்கப்பட்ட நட்சத்திர வடிவிலான ஏரியில் இப்படகு இல்லம் அமைந்துள்ளது. கடந்த 2020-2021

ஆம் ஆண்டு கொடைக்கானல் படகு குழாமிற்கு சுமார் 1,84,380 சுற்றுலாப் பயணிகள் வருகை புரிந்துள்ளனர்.

### 13.7. படகு குழாம், ஏற்காடு

கிழக்குத் தொடர்ச்சி மலையில் சேர்வராயன் மலைத் தொடரில் "தென்னகத்தின் அணிகலன்" என அழைக்கப்படும் ஏற்காடு அமைந்துள்ளது. தொலை தூரங்களில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளை கவரும் முக்கிய சுற்றுலாத்தலமாக, 28.40 ஏக்கர் பரப்பளவில் ஏற்காடு ஏரி அமைந்துள்ளது. மனதை கொள்ளை கொள்ளும் இந்த ஏரியில் மிதி படகு, துடுப்புப் படகு மற்றும் விசைப்படகு போன்ற படகுகள் உள்ளன. கடந்த 2020–2021 ஆம் ஆண்டு ஏற்காடு படகு குழாமிற்கு சுமார் 1,03,608 சுற்றுலாப் பயணிகள் வருகை புரிந்துள்ளனர்.

### 13.8. படகு குழாம், பிச்சாவரம்

"பிச்சாவரம்" பெரிய அலையாத்தி காடுகள் சூழ்ந்துள்ள சுற்றுலாத் தலமாகவும் புலம் பெயரும் பறவைகளின் புகழிடமாகவும் திகழ்கிறது. இப்படகு இல்லம் அலையாத்தி காடுகளின் மத்தியில் இயற்கை எழில் கொண்ட காட்சியை இரசித்த வண்ணம் படகு சவாரியை அனுபவிக்க உகந்த இடமாக உள்ளது.

பிச்சாவரம் படகு குழாம் சுமார் 5.27 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இப்பகுதி கடலிலிருந்து மணல் திட்டுக்களால் பிரிக்கப்பட்டுள்ளது. கடந்த 2020-2021 ஆம் ஆண்டு பிச்சாவரம் படகு குழாமிற்கு சுமார் 69,668 சுற்றுலாப் பயணிகள் வருகை புரிந்துள்ளனர்.

### 13.9. படகு குழாம், குற்றாலம்

"தென்னகத்தின் நீரூற்று" (Spa of South India) என்று அழைக்கப்படும் தென்காசி மாவட்டத்தில் குற்றாலம், மேற்குத் தொடர்ச்சி மலையில் அழகுற அமைந்துள்ளது. கண்ணைக் கவரும் இயற்கை எழில்மிகும் காட்சிகள் மற்றும் அருவிகள் நிறைந்த சுற்றுலாத் தலமாக தென்னகத்தில் அமைந்துள்ளது. குற்றாலத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் ஜூன், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாத பருவக்காலத்தின் போது சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக படகு சவாரி வசதிகள் செய்யப்படுகின்றன. இங்கு துடுப்புப் படகு, மிதி படகு மற்றும் ஓரிருக்கை படகு (Kayak) போன்ற படகுகள் உள்ளன. இதன் மூலம் எழில் வாய்ந்த இயற்கை சூழலில் விறுவிறுப்பூட்டும் படகு சவாரி நடத்தப்படுகிறது.

## 13.10. தொலைநோக்கி இல்லம்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் ஊட்டியில் உள்ள தொட்டபெட்டாவிலும் கொடைக்கானல் மற்றும் ஏற்காடு ஆகிய இடங்களில் மலைவாசஸ்த்தலங்களில் உள்ள பரந்து விரிந்த இயற்கை எழில் கொண்ட காட்சிகளை கண்டுகளிக்க தொலைநோக்கி இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த தொலைநோக்கி இல்லங்கள் அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்றன. தொட்டபெட்டா தொலைநோக்கி இல்லத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக நிதியின் மூலம் புதியதாக ஒரு சிற்றுண்டி கூடம் வனத்துறை மூலம் கட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட மூன்று தொலைநோக்கி இல்லங்களுக்கு கடந்த 2020–2021 ஆம் ஆண்டு சுமார் 2,38,800 சுற்றுலாப் பயணிகள் வருகை புரிந்துள்ளனர்.

## 14. சுற்றுலா மற்றும் போக்குவரத்துப் பிரிவு

ஒரு ரம்மியமான புதிய சுற்றுலா தலத்திற்கு பயணம் செய்வதன் மூலம் பல்வேறு பண்பாடு, பழக்கவழக்கங்கள் மற்றும் மகிழ்ச்சியான அனுபவங்கள் ஏற்படுகின்றன.

சுற்றுலா சேவையை மேம்படுத்தியும், அதிகரித்து வரும் சுற்றுலாத் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கத்துடன், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அற்புதமான நீங்கா நினைவுகளுடன் கூடிய பயண அனுபவங்களை வழங்குவதில் முன்னணியில் உள்ளது.

தமிழகத்தின் சுற்றுலா வளத்தினை அனைவரும் அறியும் வண்ணம் பல்வேறு வகையான சுற்றுலா மற்றும் சுற்றுலா பயணத்திட்டங்களை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தி வருகிறது.

இந்நிறுவனம் 35 இருக்கைகள் கொண்ட 4 குளிர்சாதன சொகுசு பேருந்துகள், 35 இருக்கைகள் கொண்ட 3 குளிர்சாதன வசதியில்லாத சொகுசு பேருந்துகள், 18 இருக்கைகள் கொண்ட 3 குளிர்சாதன சொகுசு பேருந்துகள், 45 இருக்கைகள் கொண்ட ஒரு நவீன வால்வோ பேருந்து, 43 இருக்கைகள் கொண்ட 3 நவீன வால்வோ பேருந்து ஆகிய 14 உயர்தர பேருந்துகளை இயக்கி வருகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மாநிலத்தின் பல்வேறு சுற்றுலா தலங்களுக்கு சுற்றுலாக்களை ஏற்பாடு செய்து வருகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் இயக்கப்படும் பல்வேறு

சுற்றுப் பயணங்களில், ஒருநாள் திருப்பதி சுற்றுலா, 3 நாட்கள் நவக்கிரக சுற்றுலா, 8 நாட்கள் தமிழ்நாடு சுற்றுலா மற்றும் 8 நாட்கள் கிழக்கு – மேற்கு கடற்கரை சுற்றுலா ஆகியவை சுற்றுலாப் பயணிகளிடையே மிகவும் பிரபலமானவை ஆகும். இச்சுற்றுலாக்களைத் தவிர, குழுவாகச் செல்ல விரும்புகிற சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவு செய்வதற்காக, அவரவர் விருப்பத்திற்கு ஏற்ற வகையில் தொகுப்பு சுற்றுலா, அரசு ஊழியர்களுக்கான விடுப்புப் பயணச் சலுகை சுற்றுலா மற்றும் பள்ளி மாணவர்கள் பயன்பெற கல்வி சுற்றுலா ஆகிய பயணங்களையும் ஏற்பாடு செய்து வருகிறது.

### 14.1. ஆன்மீகச் சுற்றுலா சுற்றுகள்

ஒரு நாள் திருப்பதி சுற்றுலா, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்படும் மிக பிரபலமான ஆன்மீகச் சுற்றுலாவாகும். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஆன்லைன் முன்பதிவு சேவை, திருமலை திருப்பதி தேவஸ்தானத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இங்கு ஒவ்வொரு முன்பதிவிற்கு ஒரு பார்கோடு (Bar Code) உருவாக்கப்படுகிறது. இது சுற்றுலாப் பயணிகளை நேரடி சரிபார்ப்பு இன்றி துரித அனுமதி பெற

உதவுகிறது. திருமலை திருப்பதி தேவஸ்தானம் (TTD) தமிழகத்தில் இருந்து வரும் பக்தர்களின் நலனுக்காக தினசரி தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு 150 விரைவு தரிசன டிக்கெட்டுகளை வழங்குகிறது.

### 14.2. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சந்தைப்படுத்தும் முயற்சிகள்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் மேற்கொள்ளப்படும் சுற்றுலாக்கள், ஓட்டல் தமிழ்நாடு விடுதிகள் மற்றும் படகு குழாம்களை திறம்பட சந்தைப்படுத்தி விற்பனை செய்வது இப்பிரிவின் பொறுப்பாகும். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் மற்றும் சுற்றுலா தொகுப்புகளின் விற்பனையை ஊக்குவிக்க பல்வேறு சந்தைப்படுத்தும் உத்திகளை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களில் தங்கும் விகிதத்தை உயர்த்த, ஓட்டல்களில் விடுமுறைக்கால தங்கும் வசதிகளை வழங்குவதற்காக "வைப்புத் தொகை தங்கும் வசதி திட்டத்தின்" (Deposit accommodation scheme) கீழ் ஒன்றிய கலால் துறை, தொழிலாளர் மாநில காப்பீட்டுக்

கழகம் (ESI) மற்றும் தொழிலாளர் வருங்கால வைப்புநிதி நிறுவனம் (EPF) ஆகியவற்றுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளன.

## 14.3. விடுமுறை இல்லம் – முன் வைப்பு விடுதி திட்டம்

சென்னையில் உள்ள தொழிலாளர் மாநில காப்பீட்டுக் கழகம் ரூ.70 இலட்சத்தை (ஓட்டல் தமிழ்நாடு, ஊட்டிக்கு ரூ.35 இலட்சம், ஓட்டல் தமிழ்நாடு, கன்னியாகுமரிக்கு ரூ.35 இலட்சம்) 'வைப்புத் தொகை தங்கும் வசதி' திட்டத்தின் கீழ் 01.05.2020 முதல் 30.04.2022 வரை 2 ஆண்டுகளுக்கு செலுத்தியுள்ளது. ஓட்டல் தமிழ்நாடு, ஊட்டி மற்றும் ஓட்டல் தமிழ்நாடு, கன்னியாகுமரி ஆகிய இடங்களில் இருவர் தங்கும் இரண்டு அறைகள் இந்நிறுவனத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

தொழிலாளர் மாநில காப்பீட்டுக் கழகம், மதுரை 'வைப்புத் தொகை தங்கும் வசதி' திட்டத்தின் கீழ் 03.07.2020 முதல் 02.07.2023 வரை மூன்று ஆண்டுகளுக்கு ரூ.32 இலட்சம் செலுத்தியுள்ளது. ஓட்டல் தமிழ்நாடு, கொடைக்கானலில் இருவர் தங்கும்

இரண்டு அறைகள் இந்நிறுவனத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

தொழிலாளர் மாநில காப்பீட்டுக் கழகம், சேலம் வைப்புத் தொகை தங்கும் வசதி திட்டத்தின் கீழ் ரூ.35 இலட்சத்தை 05.05.2021 முதல் 04.05.2024 வரை மூன்று ஆண்டுகளுக்கு செலுத்தியுள்ளது. இதன் மூலம் ஓட்டல் தமிழ்நாடு, ஏற்காட்டில் இருவர் தங்கும் இரண்டு அறைகள் இந்நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

ஒன்றிய கலால் துறை, மதுரை 01.06.2019 முதல் 30.05.2022 வரை மூன்று ஆண்டுகளுக்கு 'வைப்புத் தொகை தங்கும் வசதி' திட்டத்தின் கீழ், ரூ.30 இலட்சம் செலுத்தியுள்ளது. ஓட்டல் தமிழ்நாடு, கொடைக்கானல் விடுதியில் இருவர் தங்கும் இரண்டு அறைகள் இந்நிறுவனத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

தொழிலாளர் வருங்கால வைப்புநிதி நிறுவனம், நாகர்கோவில் 06.12.2020 முதல் 05.12.2022 வரை இரண்டு ஆண்டுகளுக்கு ரூ.50 இலட்சம் செலுத்தியுள்ளது. ஓட்டல் தமிழ்நாடு, கன்னியாகுமரியில் இரு படுக்கை வசதி கொண்ட குளிர்சாதன வசதி இல்லாத இரு அறைகள் மற்றும்

ஒரு குடும்ப அறை இந்நிறுவனத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த திட்டத்தின் மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ரூ.217 இலட்சம் வைப்புத் தொகையாக 2020–2021 ஆம் ஆண்டில் பெறப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:–

| **நிறுவனம்** | **தொகை (ரூ.இலட்சத்தில்)** |
|---|---|
| தொழிலாளர் மாநில காப்பீட்டுக் கழகம், சென்னை | 70.00 |
| தொழிலாளர் மாநில காப்பீட்டுக் கழகம், மதுரை | 32.00 |
| தொழிலாளர் மாநில காப்பீட்டுக் கழகம், சேலம் | 35.00 |
| ஒன்றிய கலால் துறை, மதுரை | 30.00 |
| தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம், நாகர்கோவில் | 50.00 |
| **மொத்தம்** | **217.00** |

**15. பொருட்காட்சி பிரிவு:**

மாநிலத்தின் கலை மற்றும் பண்பாட்டை ஊக்குவிப்பதற்காக பல்வேறு கண்காட்சி மற்றும் திருவிழாக்களை நடத்துவது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பொறுப்பாகும். ஒவ்வொரு ஆண்டும் இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சென்னை தீவுத்திடலில் உள்ள சுமார் 21 ஏக்கர் நிலப்பரப்பில் நடத்தி வருகிறது. இதுவே நகரத்தின் மிகப்பெரிய வருடாந்திர பொருட்காட்சி என்பது சிறப்பாகும். இதைத் தவிர வணிக கூட்டங்கள் மற்றும் பிற நிகழ்ச்சிகள் நடக்கும் மையமாகவும் இப்பொருட்காட்சி திகழ்கிறது.

2020–2021 இல் கோவிட்–19 பெருந்தொற்று காரணமாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியையோ மற்றும் வேறு எந்த முக்கிய நிகழ்வுகளையோ நடத்த இயலவில்லை.

தீவுத்திடல் மைதானத்தில் பல்வேறு கண்காட்சிகள், திருவிழாக்கள், பொழுதுபோக்கு மற்றும் இதர செயல்பாடுகளை நடத்துவதற்கான

அதிநவீன உள்கட்டமைப்புடன் கூடிய செயல்பாட்டு மையமாக மாற்ற அனுபவம் வாய்ந்த திட்ட ஆலோசகர் மூலம் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

## 16. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் மின்னாளுமை முயற்சிகள்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மின் ஆளுமை முயற்சிகள், தமிழக சுற்றுலாவை பற்றிய தகவல்களை வழங்குவதற்காகவும், சுற்றுலா விடுதிகளின் முன்பதிவுகளை இணையவழியில் செய்யும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டது. இதனால் உலகெங்கிலும் உள்ள பயணிகளிடமிருந்து முன்பதிவு அதிகரித்துள்ளது.

ஒருங்கிணைந்த முன்பதிவு அமைப்பின் (Centralised Reservation System) அதிநவீன மென்பொருள் மூலம் தமிழ்நாட்டில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விற்பனை பிரிவில் இருந்து அறைகள் மற்றும் தொகுப்பு சுற்றுலாப் பயணங்களை முன்பதிவு செய்ய இயலும்.

இணையவழி உடன் நிகழ் முன்பதிவு (Online Real Time Reservation System) அடிப்படையில்

அனைத்து தமிழ்நாடு ஓட்டல்களிலும் முன்பதிவு செய்ய உடன் நிகழ் முன்பதிவு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், ஒரு நாள் திருப்பதி சுற்றுலா உடன் நிகழ் முன்பதிவை திருமலை திருப்பதி தேவஸ்தான அமைப்புடன் ஒருங்கிணைந்துள்ளது.

படகு இயக்குதலை ஒழுங்குபடுத்த "படகு குழாம் மேலாண்மை அமைப்பு" என்ற மென்பொருளை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் படகு இல்லங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் படகு சவாரி முன்பதிவு விவரங்களை அறிய முடியும், மேலும் படகுகளை காலவிரயமின்றி பயன்படுத்த முடியும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தை மக்களிடம் பிரபலப்படுத்த டுவிட்டர், பேஸ்புக், இன்ஸ்டாகிராம் போன்ற சமூக வலைதளங்களின் வாயிலாக சந்தைப்படுத்தும் முயற்சிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

### 17. பங்கு ஈவுத்தொகை

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் 2019−2020−ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் 30 சதவிகிதம் பங்கு ஈவுத்தொகை ரூ.3.12 கோடிக்கான காசோலை தமிழக அரசிடம் வழங்கப்பட்டது.

### 18. முடிவுரை


சுற்றுலாவை ஊக்குவிப்பதற்கும், சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துவதற்கும் புதுமையான செயல்முறைகளையும், உத்திகளையும் சுற்றுலாத்துறை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. அதிகம் அறியப்படாத சுற்றுலாத் தலங்களை பிரபலப்படுத்துவதற்கும், அவற்றை மேம்படுத்துவதற்கும் மற்றும் பல்வேறு சுற்றுலாத் துறை சார்ந்த தொழில் அமைப்புகளுடன் இணைந்து வணிக வாய்ப்புகள் மிகுந்த சுற்றுலாக்களை (Niche Toruism) மேம்படுத்துவதற்கும் இத்துறை கவனம் செலுத்தும். தேசிய அளவிலும் பன்னாட்டு அளவிலும்

அனைவரும் மிகவும் விரும்பி சுற்றுலாப் பயணம் செல்லக்கூடிய சுற்றுலா மையமாக தமிழ்நாட்டை நிலைநிறுத்தும் வகையில் இடைவிடாது முயற்சிகளை தமிழ்நாடு சுற்றுலாத் துறை மேற்கொண்டு வருகிறது.

**டாக்டர் மா. மதிவேந்தன்**
**சுற்றுலாத்துறை அமைச்சர்**


## இணைப்பு– 1

## சுற்றுலாத்துறை நிர்வாக அமைப்பு



## இணைப்பு - 2

### தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக நிறுவன அட்டவணை



## இணைப்பு–3

### சுற்றுலா அலுவலகங்கள்

### தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலா அலுவலகங்கள்

| | | |
|---|---|---|
| 1. அரியலூர் | 12. மதுரை | 23. திருவண்ணாமலை |
| 2. சென்னை | 13. மாமல்லபுரம் | 24. திருவள்ளூர் |
| 3. கோயம்புத்தூர் | 14. நாமக்கல் | 25. திருவாரூர் |
| 4. சிதம்பரம் | 15. பூம்புகார் | 26. தேனி |
| 5. தர்மபுரி | 16. புதுக்கோட்டை | 27. தூத்துக்குடி |
| 6. ஈரோடு | 17. பெரம்பலூர் | 28. திருப்பூர் |
| 7. காரைக்குடி | 18. இராமேஸ்வரம் | 29. உதகமண்டலம் |
| 8. கன்னியாகுமரி | 19. சேலம் | 30. வேலூர் |
| 9. கொடைக்கானல் | 20. திருச்சிராப்பள்ளி | 31. விருதுநகர் |
| 10. கிருஷ்ணகிரி | 21. திருநெல்வேலி | 32. விழுப்புரம் |
| 11. கரூர் | 22. தஞ்சாவூர் | |

### வெளி மாநிலங்களில் உள்ள சுற்றுலா அலுவலகங்கள்

1. புதுடெல்லி
2. ஆக்ரா
3. ஜெய்ப்பூர்
4. கொல்கத்தா
5. மும்பை
6. பனாஜி (கோவா)

## இணைப்பு–4

## சுற்றுலா தகவல் மையங்கள்

| **விமான நிலையத்தில் அமைந்துள்ளவை** | **இரயில் நிலையத்தில் அமைந்துள்ளவை** |
|---|---|
| 1. சென்னை (பன்னாட்டு முனையம்)<br>2. சென்னை (உள்நாட்டு முனையம்)<br>3. கோயம்புத்தூர்<br>4. மதுரை<br>5. திருச்சிராப்பள்ளி<br>6. தூத்துக்குடி<br>7. சேலம் | 1. சென்னை (எழும்பூர்)<br>2. கோயம்புத்தூர்<br>3. மதுரை<br>4. திருச்சிராப்பள்ளி<br>5. திருநெல்வேலி |
| **பேருந்து நிலையத்தில் அமைந்துள்ளவை** | **பிற இடங்களில் அமைந்துள்ளவை** |
| 1. சென்னை (கோயம்பேடு) | 1. கூடலூர் (நீலகிரி மாவட்டம்)<br>2. இராமேஸ்வரம் (கோவில் வளாகம்)<br>3. தஞ்சாவூர் (ஓட்டல் தமிழ்நாடு)<br>4. பாஞ்சாலங்குறிச்சி (தூத்துக்குடி மாவட்டம்) |

| **வெளிமாநிலங்களில் அமைந்துள்ளவை** |
| --- |
| 1. பெங்களூரு இரயில் நிலையம் (கர்நாடக மாநிலம்)<br>2. ஐதராபாத் (ஆந்திர மாநிலம்)<br>3. திருவனந்தபுரம் (கேரள மாநிலம்)<br>4. அகமதாபாத் (குஜராத் மாநிலம்)<br>5. புவனேசுவரம் (ஒடிசா மாநிலம்) |




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களிடம் 30.08.2021 அன்று தலைமைச் செயலகத்தில், புதுடில்லியில் 20.08.2021 அன்று நடைபெற்ற 7–வது சர்வதேச சுற்றுலா சங்கமம் மற்றும் பயண விருதுகள் விழாவில் தமிழ்நாடு சுற்றுலாத்துறைக்கு வழங்கப்பட்ட ஆன்மீகம் மற்றும் புனித யாத்திரை மேம்பாட்டிற்கான சிறந்த மாநிலத்திற்கான விருதினை மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் டாக்டர்.மா. மதிவேந்தன் அவர்கள் காண்பித்து வாழ்த்து பெற்றார்.



அய்யன் திருவள்ளுவர் சிலையை மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் டாக்டர்.மா.மதிவேந்தன், திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., சுற்றுலா இயக்குநர் மற்றும் அதிகாரிகளுடன் 30.07.2021 அன்று ஆய்வு மேற்கொண்டனர்.



பூம்புகார் கலைக்கூடம்



ஆகாச கங்கை நீர்வீழ்ச்சி – கொல்லி மலை



இயற்கை சுற்றுலா – ஒகேனக்கல் அருவி



அய்யன் திருவள்ளுவர் சிலை – கன்னியாகுமரி



சாகச சுற்றுலா – பாராகிளைடிங், ஏலகிரி



பாரம்பரிய சுற்றுலா – செட்டிநாடு, சிவகங்கை.



பாரம்பரிய / ஆன்மீக சுற்றுலா – ஐராவதீஸ்வரர் கோயில், தாராசுரம்



மேற்கூரை ஓவியம் – அருள்மிகு ஆட்கொண்டநாதர் திருக்கோயில், இரணியூர், சிவகங்கை.